2011 ஜனவரி 10]

அதிலே கலந்துகொண்டு அது குறித்து மக்களுக்கும் தெரியப்படுத்தியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு சர்க்கரை மற்றும் இரத்தக் கொதிப்பு நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறியவும் "நலமான தமிழகம்" என்ற திட்டத்தின்மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தில் இதுவரை 10 சதவிகித மக்களுக்கு கிராமப்புறத்தில் சர்க்கரை நோய் இருக்கிறது என்று கண்டறிந்திருக்கின்றார்கள். மேல்சிகிச்சை மற்றும் உரிய சிகிச்சை அவர்களுக்கு அளிப்பதற்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வசதி செய்யப்பட்டிருக்கின்றது என்கிற செய்தியைத் தெரிவித்துக்கொள்வதுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பிற்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கொள்முதல் மையம்

*120114—திரு. **பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சிக்கு உட்பட்ட களம்பூர் அல்லது அத்திமூரில் நேரடி கொள்முதல் மையம் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2009-2010 ஆம் ஆண்டு நெல் கொள்முதல் பருவத்தில், 22-4-2010 அன்று அத்திமூர் பகுதியிலே ஒரு நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. திறக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் முன்பணமும் கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசின் சார்பாகச் சொல்லப்பட்டாலும்கூட, அங்கே சரியான முறையிலே நெல் அறுவடை இல்லாத காரணத்தினால் 11-11-2010

[2011 ஜனவரி 10

அன்று அது மீண்டும் மூடப்பட்டது. களம்பூர் பகுதியிலே, நெல் அறுவடை இல்லை. நடப்பாண்டு 2010-2011-ல் களம்பூர் மற்றும் அத்திமூர் பகுதிகளில் நெல் விளைச்சல் இருக்கிறது. பொங்கலுக்குப் பின்னால் அங்கே மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையைப் பெற்று நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் திறக்க வேண்டும். விவசாயிகள் நெல்லைக் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுவந்து கொடுக்கும்பொழுது அரசு நிர்ணயிக்கக்கூடிய விலை அவர்களுக்குக் கிடைக்கவேண்டும். ஆனால், பெரும்பாலான நெல் கொள்முதல் நிலையங்களில் அரசு நிர்ணயித்த தொகையைவிட குறைவாகக் கொடுக்கிறார்கள். அந்த நிலை தமிழகத்தின் எல்லா இடங்களிலும் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கும், தமிழகம் முழுவதிலும் இந்த ஆண்டு நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்கவும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுகூட காவிரி-டெல்டா பகுதியிலே 1,201 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. டெல்டா அல்லாத பகுதியிலே-161ம் ஆக 1,362 கொள்முதல் நிலையங்கள் சென்ற ஆண்டுகூட திறக்கப்பட்டன. நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதிலே எந்தவித சங்கடமும் அரசுக்கு இல்லை. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிந்துரை செய்கின்றபொழுது, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கொள்முதல் நிலையங்களை நேரடியாகத் திறக்கிறது. ஆக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பரிந்துரைதான் அந்த மாவட்டத்தைப் பொறுத்தளவிற்குத் தேவை. காவிரி டெல்டா பகுதியைப் பொறுத்தளவிற்கு, ஏற்கெனவே திறந்த நெல் கொள்முதல் நிலையங்களை தொடர்ந்து நாங்கள் திறந்து கொண்டுதான் இருக்கிறோம். மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்களிடமிருந்து

2011 ஜனவரி 10]

நேரடியாக பரிந்துரைஸ்யப் பெற்று நானே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரடியாக அனுப்பியிருக்கிறேன். அந்த இடங்களிலெல்லாம் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. பல நேரங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தொலைபேசியிலே என்னிடத்தில் சொல்கிறபொழுது, குறிப்பாக விழுப்புரம் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவராஜ் போன்றவர்கள் என்னிடத்திலே தொலைபேசியில் தொடர்பு கொண்டதை வைத்துக்கொண்டேகூட அங்கேயெல்லாம் திறந்திருக்கிறோம். அரசு நிர்ணயித்திருக்கிற தொகைகள், கொள்முதல் நிலையங்களிலே கட்டாயம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. பில் அப்படித்தான் போடப்படுகிறது.

அதேநேரத்திலே, அங்கு கொள்முதல் செய்யப்படுகின்ற இடங்களில் பட்டியல் எழுத்தர்கள் சில நேரங்களிலே தவறு செய்தார்கள் என்ற அடிப்படையிலே சென்ற ஆண்டுகூட அதிலே பணியாற்றுகின்ற 50-க்கும் மேற்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற தகவல் ஏதாவது இருக்குமென்று சொன்னால், இந்தத் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கும். விவசாயிகளைப் பொறுத்த அளவில் அரசு நிர்ணயித்திருக்கிற பொது ரகத்திற்கு ரூ.1,050-ம், சன்ன ரகத்திற்கு ரூ.1,100-ம் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. ஆங்காங்கு ஏதாவது குறை இருக்கும் என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நலன் கருதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நெல் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு வட்டத் தலைமை இடத்திலும் ஏற்கெனவே விவசாயிகளுடைய நெல்லை அல்லது

[2011 ஜனவரி 10

அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் அது மணிலாவாக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும் அல்லது எந்தப் பொருட்களாக இருந்தாலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக அவர்களுக்கு விலை கிடைக்கவேண்டும். வியாபாரிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு விலையை அதிகமாகக் கொடுத்து வாங்குகின்றார்கள் என்ற அடிப்படையில் அது உருவாக்கப்பட்டது. அதேநேரத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தில்கூட சேத்துப்பட்டு, செஞ்சி போன்ற பகுதிகளிலே நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக பக்கத்திலேகூட நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. பக்கத்திலே வாங்குமுடியுமேயொழிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக வாங்குவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.*

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் காவிரி-டெல்டா மாவட்டங்களிலே நெல் கொள்முதல் செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் நெல் கொள்முதல் செய்கிறபொழுது ஊக்கத் தொகையும் கூடுதலாக அறிவிப்பது என்பது தமிழ்நாடு அரசினுடைய வழக்கமான ஒன்று. மூன்றாம் வருடம் அப்படி உயர்த்தி வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு உயர்த்தி வழங்கப்படாமல் இருக்கிறது. இப்பொழுது கடுமையான மழை வெள்ளப் பாதிப்பிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், நெல்லுக்கான ஊக்கத் தொகையை எப்பொழுதும்போல தமிழ்நாடு அரசாங்கம் இந்த ஆண்டும் உயர்த்தி அறிவித்து வழங்கச் செய்வதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தளவிற்கு சாதா ரகத்திற்கு *950* ரூபாயும், சன்ன ரகத்திற்கு *980* ரூபாயும்தான் நிர்ணயம்

2011 ஜனவரி 10]

செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கூடுதலாக தொகை அளிக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கம் 50 ரூபாய் ஊக்கத் தொகை அளித்தது. அது போதாது என்கிற காரணத்தினால்தான் தமிழக முதல்வர் மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள் மாநில அரசின் சார்பாக சாதா ரகத்திற்கு 50 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 70 ரூபாயும் ஊக்கத் தொகையாக அளித்ததன் வாயிலாகத்தான், இப்பொழுது 1,050 ரூபாய், 1,100 ரூபாய் என்று கிடைக்கிறது. இந்த ஆண்டு தொடர்ந்து அந்த 50 ரூபாய், 70 ரூபாய் என்பதைக் கொடுக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அது தொடர்ந்து கிடைக்கும். மேலும் கிடைக்குமா என்று கேட்கிறார்கள். ஆக, நெல்லினுடைய விலை அதிகமாக ஆக அரிசியினுடைய விலையும் அதிகமாகும் என்பதும் அவருக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

ஒலி, ஒளிக் காட்சி

***62335—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதி அம்பாள் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில், ஒலி, ஒளிக் காட்சி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதி அம்பாள் திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. என். மாலைராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியினுடைய மையப் பகுதியில்